பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

STAFF COPY NOT FOR SALE

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

# உதயன்

விலை ரூபா 3·50

PUMP
With
Standard Accessories
Select



NEWTONE
Water Pumps

சுடர் 5: பிரமோதூத ௵ ஆனி ௴ 16 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 06 (30 - 06 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAM'L DAILY கதிர்: 127

# மீண்டும் நேற்று யாழ்நகர பகுதியில் போர் விமானங்கள் அனர்த்தம்!

## 10 வானூர்திகள் 2½ மணி நேரம் குண்டு வீச்சு!! வங்கி, கல்லூரி மற்றும் பல வீடுகள் சேதம்!!!

யாழ்ப்பாணம், ஜூன் 30

நான்கு நாள் இடைவெளியின் பின்னர் நேற்று மாலை மீண்டும் யாழ். நகரின் மீது போர் விமானங்கள் அனர்த்தம் புரிந்தன. பத்து வானூர்திகள் சுமார் இரண்டரை மணி நேரம் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களில் தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை, யாழ், மத்திய கல்லூரி கட்டடத்தின் ஒரு பகுதி ஆகியவையும் இருபத்தி ஐந்துக்கும் அதிகமான வீடுகளும் முற்றாகச் சேதமுற்றன.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணி முதல் மாலை ஐந்தரை மணி வரை இரண்டரை மணி நேரம் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் நான்கு குண்டுவீச்சு விமானங்கள், வை-12 ரக சிறு விமானங்கள் இரண்டு, வை-8 ரக பெரிய விமானம் ஒன்று, மற்றும் மூன்று ஹெலிக்கொப்டர்கள் ஆகியவை கூட்டாக ஈடுபட்டன. அவை மாறி மாறி வந்து குண்டுகளை பொழிந்து தள்ளின.

விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டுகளில் அனேகமானவை யாழ் மத்திய கல்லூரிக்கு பின்புறமாக, முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு, மூன்றாம் குறுக்குத்தெரு, நான்காம் குறுக்குத்தெரு, ஐந்தாம்குறுக்குத் தெரு, பிரதான வீதி ஆகிய பகுதிகளில் — மக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### செஞ்சிலுவைச் சங்கத்தின்

## சர்வதேசக் குழு பிரதிநிதி அவசரமாக யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரதிநிதி திரு: பிலிப்கொன்ரசா அவசர விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்தார்.

இவர் நேற்றுக் காலை பல்வேறு இடங்களைப் பார்வையிட்டதுடன் முக்கிய பிரமுகர்கள் சிலரையும் சந்தித்து உரையாடினார்.

யாழ். போதனா வைத்திய சாலையை மீள இயங்க வைத்தல், உணவுப் பொருள் விநியோகம், உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து அவர் சம்பந்தப்பட்டவர்களுடன் ஆராய்ந்தார்.

இன்று காலை இவர் கொழும்பு திரும்புகிறார். (ஒ-3)

### கோடம்பாக்கம் கொலைகள்:

## 500 பொலீஸார் சேர்ந்து தீவிர கடற்கரை வேட்டை!

சென்னை ஜூன் 30

கோடம்பாக்கத்தில் வைத்து ஈ. பி. ஆர். எல். எப். தலைவர்கள் கொலையுண்ட சம்பவம் தொடர்பாக, சந்தேக நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை தமிழ்நாடு பொலீஸ் தீவிரப்படுத்தியுள்ளது.

கொலைஞர்களைக் கைது செய்வதற்காக ஐந்நூறு பொலீஸார் தஞ்சாவூர் மாவட்டக் கரையோரப் பகு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 4 மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்து 22 பேர் பலி

பம்பாய் மாநகரில் கடந்த வியாழன் பெய்த பெருமழை காரணமாக நான்கு மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது.

இச் சம்பவத்தில் 22 பேர் உயிரிழந்தனர். 25 பேர் படுகாயம் அடைந்தனர்.

கட்டட இடிபாடுகளுக்கு இடையே இன்னும் பலர் சிக்கியிருப்பதாக அஞ்சப்படுகிறது. (ஒ-எ)

## மட்டுநகரில் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 30

நேற்றுக் காலையில் இருந்து மட்டக்களப்புநகரில் இலங்கை பாதுகாப்புப் படையினர் காலவரையறை அற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

12 வயது முதல் 50 வயது வரையானநகரமக்கள்அனைவரையும் தேவாலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாலம் தகர்ப்பு!

மட்டக்களப்பில் முக்கிய பாலம் ஒன்றை விடுதலைப் புலிகள் போராளிகள் குண்டு வைத்துத் தகர்த்துவிட்டனர் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## வவுனியா, மன்னாரில் தொடர்ந்து கடும் மோதல்

கொழும்பு, ஜூன் 30

வவுனியா, மன்னார் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுப்படைகளுக்கும் இடையில் தொடர்ந்து கடும் மோதல் நடைபெற்று வருவதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இந்த இடங்களில் விடுதலைப்புலிகளின் பலத்த எதிர்ப்பை அரசுப்படைகள் எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (உ)

## படையினர் 4 பேர் பலி

கொழும்பு, ஜூன் 30

வவுனியாவில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும்இடையேதொடர்ந்துகடும் சண்டை நடந்துவருகிறது.

நேற்று நடந்த நேரடி மோதல் சம்பவத்தில் படையினர் தரப்பில் நால்வர் உயிரிழந்தனர். அந்த நால்வரில் ஒருவர் அதிகாரி எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## 9 சிப்பாய்கள் படுகாயம்

கொழும்பு, ஜூன், 30

மன்னாரில் விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையே நடந்த கடும் சண்டையில் ஒன்பது சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் கண்ணி வெடித் தாக்குதலினால் படையினரால் முன்னேற முடியவில்லை என்று இராணுவ அதிகாரிகள் தெரிவிந்தனர். (ஒ-எ)

## வாசகர் கவனத்துக்கு!

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக உதயனின் விநியோக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

வடமராட்சிப் பகுதிக்கும் மற்றும் பளை, பரந்தன், கிளிநொச்சி, பூநகரி போன்ற தூர இடங்களுக்குமான பத்திரிகை விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தற்போது நிலவுவது போன்ற நெருக்கடியான சூழ்நிலையில் பத்திரிகை ஓர் அத்தியாவசிய சேவை என்பதை நாம் உணர்ந்துள்ளோம். எனினும் எமது சக்திக்கும் அப்பாற்பட்ட சூழ்நிலைகள் காரணமாக எமது பணியை சரிவர நிறைவேற்ற முடியாத நிலை உருவாகியுள்ளது.

உதயன் பத்திரிகை விநியோகம் தடைப்படும் வேளையில் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அப்பகுதியைச் சேர்ந்த தனியார் யாரேனும் வேறு முகவர்களிடமிருந்து உதயனை வாங்கி அப்பகுதியில் அதிக விலைக்கு விற்க முயற்சிக்கக் கூடும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அது பற்றிய தகவல்களை எமக்கு அறிவிக்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம்.

எரிபொருள் நிலைமை சீரடைந்தால் வாசகர்களுக்குரிய சேவையை உரிய முறையில் வழங்குவோம் என உறுதி கூறுகிறோம்.

— நிர்வாகத்தினர்

## 'தமிழீழ மீட்பு நிதி' பற்றி புலிகள் நேற்று அறிவிப்பு

''தமிழீழ மீட்பு நிதி'' ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

ஸ்ரீலங்கா அரசின் அனைத்து ஒடுக்கு முறைகளிலிருந்தும் தமிழ்த் தேசிய இனத்தை விடுவித்து தமிழீழ தனியரசை அமைப்பதற்காக எமது மண்ணில் ஒரு யுத்தம் இன்று நடந்து கொண்டிருக்கிறது.

இந்த யுத்தத்தை நாம் வெற்றி கொள்ள வேண்டும். இந்த யுத்தத்தில் எம்மை முறியடித்து தமிழ் பேசும் மக்களை அழித்தொழிப்பதற்காக, தனது வளங்கள் அனைத்தையும் ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தி வருவதை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் படையை அனுப்பும் வழியில் இந்தியா சிந்திக்கவில்லை

### குஜ்ரால் சொல்கிறார்

புதுடில்லி, ஜூன் 30

''இலங்கைக்கு மீண்டும் படையை அனுப்பும் வழியில் இந்தியா சிந்திக்கவில்லை'' என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. இந்தர் குமார் குஜ்ரால் தெரிவித்திருக்கிறார்.

பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே திரு. குஜ்ரால் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் தமது பேட்டியில் கூறியிருப்பதாவது:-

இலங்கை நெருக்கடியில் பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவது குறித்து இந்தியா மிகவும் கவலை கொண்டுள்ளது.

இந்தியாவின் இக் கவலை குறித்து இலங்கை அரசு போதிய கவனம் செலுத்தும் என்று நம்புகின்றேன்.

இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடும் நோக்கம் இந்தியாவுக்கு கிடையாது.

கேள்வி: இலங்கை அரசாங்கம் அழைத்தால் மீண்டும் இந்தியா அமைதிப்படையை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர் தலைமையில் இன்று அவசரக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக இன்றுகாலை 10 மணிக்கு செயலகத்தில் அவசரக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

உதவி அரசாங்க அதிபர்கள், பெற்றோலியம் கூட்டுத்

(4ஆம் பக்கம் பார்க்க]

## தனியார் பஸ் நிலையம் முத்திரைச் சந்தையில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

நல்லூரில் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக தற்காலிகமாக இயங்கிவந்த தனியார் பஸ்நிலையம் நேற்று முதல் முத்திரைச்சந்தைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

வெளியூர் மற்றும் உள்ளூர்களுக்கான தனியார் பஸ் சேவைகள் யாவும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக இருந்தே நடைபெற்று வந்தன.

இந்தப்பகுதி பாதுகாப்பற்றதாக உள்ளதால் முத்திரைச்சந்தைக்கு மாற்றப்பட்டதாக மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்.

இதனிடையில் தனியார் பஸ்கள் அனைத்தும் முத்திரைச்சந்தைக்கு மாற்றப்பட்டதையடுத்து ஓட்டோ வண்டிகளும் வாடகைக் கார்களும் அங்கு சென்றுள்ளன. (ஒ-10)

## இராணுவ நடவடிக்கை எடுக்க வி.பி. சிங்கிற்கு நெருக்குதலாம்

புதுடில்லி, ஜூன் 30

இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்க, இராணுவ நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங்கிடம் வலியுறுத்தப்பட்டு வருவதாக அரசியல் அவதானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்:

ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் வேறு எந்த வெளிநாடும் இலங்கையில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடத் தடைவிதிக்கிறது-

அரசு - விடுதலைப் புலிகள் சண்டை உக்கிரமடையும் பட்சத்தில் தமிழ் மக்கள் தரப்பில் அழிவுகள் அதிகரித்தால் ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வரவே செய்வர்-

அப்படியான ஒரு நிலையில் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். அந்தத்தலையீடு இராணுவ நடவடிக்கையாகவே இருக்க முடியும்-

இவ்வாறு எதிர்க்கட்சியான காங்கிரஸ் மட்டுமன்றி, திரு.

(4-ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

30- 6 - 90

சனிக்கிழமை ஆனி 16

சுபநேரம்:

02-56—04-26

இராகுகாலம்

08-56—10-26

## அகதிகள் வருகை அதிகரிப்பு; இம்மாதத்தில் மட்டும் 330 பேர்

சென்னை, ஜூன் 30

இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்துக்குத் தமிழ்அகதிகள் செல்வது அதிகரித்துள்ளதாக நேற்றுச் சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

இம்மாதத்தில் இதுவரை 330 இலங்கைத் தமிழர்கள் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்ததாக பொலீஸ் ஆணையாளர் பி. துரை தெரிவித்தார். (ஒ-எ)

### முச்சந்தி முரளி



தமிழன் அடிக்கடி அகதியாகி ஓடுவது சர்வ சாதாரணமாய் வந்திட்டுது உதுக்கு முடிவு எப்போது......?

## ஆசிரியர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

சம்பளம் வழங்குவதில்தமக்குப் பாரபட்சம் காட்டப்பட்டுவிட்டதாக ஆசிரியர்கள் பலரும் உதயனுக்கு முறைப்பாடு செய்தனர்.

நேற்று இம்மாதத்திற் உரிய சம்பளம் வழங்கப்பட்டது.

கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் முழுச் சம்பளம் வழங்கப்பட்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## இவ்வாண்டு சார்க் மாநாடு நடத்தும் எண்ணத்தை இலங்கை கைவிட்டது!

கொழும்பு, ஜூன் 30

ஐந்தாவது சார்க் உச்சி மாநாட்டை இவ்வாண்டு கொழும்பில் நடத்தவேண்டும் என்றகோரிக்கையை இலங்கை அரசு கைவிட்டது.

இதனை வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சருக்கு அனுப்பிய செய்தியில் தெரிவித்துள்ளார்.

சார்க் அமைப்பின் நடப்பு வருடத் தலைவரான பாகிஸ்தானுக்கு அவர்விடுத்த வேண்டுகோளில் ஆறாவது சார்க்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ● இருபதாயிரம் அகதிகள் பட்டினி நிலையில் ...?

யாழ்ப்பாணம், ஜூன் 30

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பல கிராமங்களில் அகதிகளாகத் தங்கி இருப்போர் உணவின்றிப் பட்டினி கிடக்கிறார்களா?

திருகோணமலை நகரம் சாம்பல்தீவு, மூதூர், கிண்ணியா, கந்தளாய் ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்த இருபதாயிரத்துக்கும் கூடுதலான அகதிகள் இப்போது புல்மோட்டை,

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## (சின்னஞ்சிறு விளம்பரம்)

### விற்பனை

புத்தம் புதிய Remington Type-Writer, L33 Ceiling Fan, சிறிய அலுமாரி, கட்டில், மெத்தை, Floor Polisher, பெரிய அளவிலான பிறேம்போட்ட உலகப்படம் ஆகியன விற்பனைக்குண்டு. 37, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (13537)

### புறொயிலர் கோழி விற்பனைக்கு

அரியாலைச் சந்திக்கு அருகாமையில் புறொயிலர் கோழி விற்பனைக்குண்டு. சில்லறை விற்பனைவிலை ரூபா 58/- மொத்தமாகப் பெறுவோருக்கு விசேட சழிவுண்டு தொடர்பு: தெய்வேந்திரம் 684, கண்டிவீதி, அரியாலை. [13488]

### காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டி மாகாவித்தியாலயத்திற்கு அண்மையில் (யாழ் நகரிலிருந்து 3 மைல் தூரத்தில்) 5 பரப்பு காணி நல்ல தண்ணீர்க் கிணறுடன் விற்பனைக்குண்டு.தொடர்பு: 455, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (13474)

### தவறிவிட்டன

திருநகர் சந்தைக்கும் முத்திரைச் சந்திக்குமிடையில் இரண்டு கோர்வைத் திறப்புக்கள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் S. யேம்ஸ் ஆசிரியர் ஜமுனாரி நல்லூரில் ஒப்படைத்தால் ரூ. 200/- வீதம் சன்மானம் வழங்கப்படும். (13524)

### ஆங்கில வகுப்புகள்

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும் ஆங்கில வகுப்புகள் சனி, ஞாயிறு மூன்று சமாந்தர வகுப்புக்களை கொண்டுள்ளது.S.ஜெயராஜா,கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3735)

### உடன் வரவும்

மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் காங்கேசன் சீமேந்து ஆலையின் முன்னால் இருக்கும் குணம் கடையிலும் லொறியிலும் வேலை செய்பவர் ஆகிய இராசலிங்கம் என்பவர் உடனடியாக நாவலர் வீதியில் இருக்கும் லொறி உரிமையாளரின் இல்லத்தில் சமுகமளிக்கவும். [13486]

### இடமாற்றம்

சிறில்ஸ் பார்மஸி லிமிட்டெட் வை. மாணிக்கவாசகர் பெருமாக்கடவை அளவெட்டிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஊழியர்கள் யாவரும் சமுகமளிக்கவும் வாடிக்கையாளர்கள் மேற்படி முகவரியில் தொடர்பு கொள்ளவும். [13487]

### Rewinding வேலைகள்

Rewinding வேலைகள் (Fan., Motor, Water Pump Coils. Motor Cycle Coils போன்றவை) திறம்படச் செய்து கொடுக்கப்படும். Mini Centre, 114, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/4737)

### CHICKEN MEAT

For All Kinds of Chicken meat Clean, Quick & Courtious Service Nallur Farm Centre, 19, Murugesar Lane, Muthiraisanthai, Nallur. (13358)

### உடன் தேவை

அச்சு எழுத்துக்களை போட்டு வைக்கும் கொம்போஸிங் கேஸ்கள் (Composing Cases) உடனடியாகத் தேவை.

நேரில் தொடர்பு கொள்ளவும்:

**உதயன்**

(கைலாசபிள்ளையார் கோவில் அருகாமையில்)
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# விரைவு தபால் சேவை 2 ஆம் திகதி முதல் அமுல்

கொழும்பு ஜூன் 30

எதிர்வரும் அடுத்த மாதம் இரண்டாம் திகதி முதல் விரைவு தபால் சேவைத் திட்டம் ஒன்றை தபால் திணைக்களம் ஆரம்பிக்க இருக்கின்றது.

கட்டணமாக ரூபா 30 அறவிடப்படும்.

உள்நாட்டில் பொதுமக்களுக்குத் துரிதமாகத் தபால்களை விநியோகிக்க இத்திட்டம் உதவும் என்று அறிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்ட நடவடிக்கையாக கொழும்பில் இருந்து களுத்துறை, மாத்தறை, இரத்தினபுரி, காலி, கேகாலை, கண்டி குருநாகல், கம்பஹா ஆகிய இடங்களில் உள்ள தபால் நிலையங்களுக்கு ஒரே தினத்தில் தபால்கள் ஒப்படைக்கப்பட்டு அந்தந்தப் பகுதியில் ஐந்து மைல் சுற்றாடலுக்குள் அவை பட்டுவாடா செய்யப்படும்.

# கிராமமட்டத்தில் விழிப்புக்குழு

கொழும்பு, ஜூன். 30

கிராம மட்டத்தில் விழிப்புக் குழுக்களை அமைப்பது என்று அரசு தீர்மானித்துள்ளது.

வெளியார், சந்தேகத்துக்கு இடமானவர்கள் குறித்தும் குறித்த நேரத்தில் வெடிக்கக் கூடிய குண்டுகள் அல்லது வெடிமருந்துகள் வைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள், பொதிகள் பற்றியும் அவதானமாக இருப்பது விழிப்புக்குழுவினரின் பொறுப்புக்களாகும் என்று அரசு அறிவித்துள்ளது.

இத்தகைய ஒருவரை அல்லது பொருளைக் கண்டால் அது பற்றி விழிப்புக் குழுவினர் அருகில் உள்ள பொலீஸ் நிலையம், அல்லது இராணுவ முகாமுக்கு அறிவிக்கவேண்டும்.

வீடுகளைச்சோதனையிடும், ஆட்களைக் கைதுசெய்யும் அதிகாரங்கள் விழிப்புக் குழுவினருக்கு வழங்கப்படவில்லை என்றும் அரசு அறிவித்துள்ளது.

கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்களை உடனடியாக அமைக்கும்படி உதவி அரசாங்க அதிபர்களை அரசு கேட்டுள்ளது. (இ-எ)

## கிண்ணியாவில்

கொழும்பு, ஜூன் 30

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியாப் பகுதியில் இருந்து மட்டும் பத்தாயிரம் பேர் அகதிகளாக வெளியேறினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-எ)

# ஓய்வு பெற மனுச்செய்ய கடைசித் திகதி இன்று

கொழும்பு. ஜூன் 30

ஊக்குவிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தாங்களாகவே முன்வந்து ஓய்வு பெற விண்ணப்பிக்கும் கடைசித் திகதி இன்று 30 ஆம் திகதி ஆகும்.

இது வரை 8 ஆயிரத்துக்கு அதிகமான ஊழியர்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ளனர் என்று இ.போ சவட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

# 34,000 பேர் விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர்

கொழும்பு, ஜூன் 30

கடந்த ஆண்டு டிசம்பரில் நடந்த ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 34 ஆயிரம் பேர், பல்கலைக்கழக அனுமதிகோரி விண்ணப்பிக்கத் தகுதியைப் பெற்றிருக்கின்றனர்.

பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்ல இத்தகவலை வெளியிட்டார்.

## நிக்கரகுவா:

# சிவில் யுத்தம் முடிவடைந்தது

மனாகுவா ஜூன் 30

நிக்கரகுவாவில் பத்து ஆண்டு காலமாக இடம்பெற்று வந்த சிவில் யுத்தம் சம்பிரதாய பூர்வமாக முடிவுக்கு வந்தது.

இதனை உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் நிகழ்ச்சி தலைநகர் மனாகுவாவில் இடம் பெற்றது.

அப்போது ஆயிரம் கொன்றா கிளர்ச்சியாளர்கள் தங்கள் தளபதிகள் தலைமையில் ஆயுதங்களை அரசுப் படைகளிடம் ஒப்படைத்தனர்.

வலது சாரி சோமோஸா ஆட்சியைக் கவிழ்த்து இடதுசாரி சான்டினிஸ்டா விடுதலை முன்னணி நிக்கரகுவாவில் ஆட்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து சிவில் யுத்தம் ஆரம்பமானது.

அமெரிக்காவின் ஆதரவுடன் கொன்றா கிளர்ச்சியாளர் அமைப்பு இடதுசாரி அரசுப்படைகளை எதிர்த்துப் போராடி வந்தது

இந்தப் பத்தாண்டு காலச் சண்டையில் 30 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.

அண்மையில் வலது சாரி ஆதரவு பெற்ற திருமதி வயலெற்றா ஷமொறா, ஜெனரல் ஒற்றேகாவைத் தோற்கடித்து ஜனாதிபதியானதைத் தொடர்ந்து ஆரம்பமான கொன்றா கிளர்ச்சி அமைப்பைக் கலைக்கும் பணி நேற்றுடன் முடிவடைந்தது.

உ
சிவமயம்

### அழகொல்லை விநாயக ஆலயம் அளவெட்டி

## அதிர்ஷ்ட லாபச் சீட்டு

நாட்டு நிலைமை காரணமாக மேற்படி ஆலயத்தில் 30/6/90 நடைபெற இருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டு அதிர்ஷ்டம் பார்த்தல் காலவரையறை இன்றி ஒத்திப் போடப்பட்டுள்ளது அதிர்ஷ்டம் பார்க்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அழகொல்லை விநாயகர் ஆலய
வழிபடுவோர் சங்கம்.

(13532)

## கண்ணீர் அஞ்சலி

### சாந்திரட்ணம் விஜயபிரகாஷ்

27-06-90 இல் நல்லூரில் இடம் பெற்ற விமானத் தாக்குதலில் அகால மரணமடைந்த தொழில் நுட்பக் கல்லூரி H. N. D. A 2ஆம் வருடமாணவன் சாந்திரட்ணம் விஜயபிரகாஷிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

உமது பிரிவால் வாடும்;
சக மாணவ மாணவிகள்,

H. N. D. A 2ஆம் வருடம்,
தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[13544]

# STRUCTURED BASIC COMPUTER PROGRAMMING

கொம்பியூட்டர் கலையை பயிலும் மாணவர்கள் தகுந்த கைநூல்கள் தமிழில் இல்லையே? என்ற கவலையை மாற்றும் நோக்குடனும், கொம்பியூட்டர் என்றால் என்ன? எவ்வாறான தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது. எந்தெந்த வகையில் மனிதனுக்கு உதவி அளிக்கின்றது என்பவற்றுடன்.........

BASIC மொழியின் பூரண விளக்கங்களும் பயிற்சித் திட்டங்களும் அடங்கியதான தமிழ் மூலம் பயிற்சித் திட்டம். நீங்கள் எங்கு கொம்பியூட்டர் கல்வியை பயின்றாலும் எமது பாடத்திட்டம் உங்களுக்கு பயிற்சிக்கான முழு விளக்கங்களையும் தமிழில் தருவதால் நீங்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வல்லமை அளிக்கின்றது.

எமது பாடத்திட்டத்திற்கான காலம் மூன்று மாதமேயாகும். மூன்று மாதங்களுக்கும் தபால் மூலம் போதனைகள் வழங்கப்படும். இதற்கான கட்டணம் ரூபா 150/- மாத்திரமேயாகும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு:-
S. B. C. P.

## Bright Training Centre

P. O. Box 162, Colombo.

[சி-4572]

# EFFECTIVE ENGLISH WITH GRAMMAR

அனைவருக்கும் எளிதாக விளங்கக் கூடிய முறையில் ஆங்கில இலக்கணத்துடன் கூடிய **Effective English with Grammar** - 6 மாத கால பயிற்சி **G.C.E O/L** மாணவர் நலன் கருதி தபால் மூலம் நடத்தப்படுகிறது.

எமது பயிற்சியினை திறம்பட செய்யும் மாணவர்கள் **British Council** உடன் இணைந்து **University of Cambridge** நடத்தும் **First in English Certificate (London) or Proficiency in English Certificate (Londoa)** எனும் பரீட்சைக்கு தயாரிக்கும் பயிற்சிகளையும் உள்ளடக்கிய தமிழ் விளக்கங்களுடன் கூடிய பாடத்திட்டமாகும்.

**G. C. E. (O/L)** மாணவர்கள் திறமை சித்தி பெற இப்பாடத்திட்டம் மிக மிக உறுதுணையானதாகும். ஆறுமாத கால மொத்தக் கட்டணம் ரூபா 450/- ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன், இடதுபக்க மூலையில் **Effective English** என எழுதி தொடர்பு கொள்க.

## *Bright Training Centre*

P. O. Box 162, Colombo.

[சி-4578]

## 2ஆம் ஆண்டு நினைவுநாள்



செல்வன்

### பரஞ்சோதி நச்சினார்க்கினியன்

(சப்பல்)

| மண்ணில்: | மண்ணுடன்: |
|---|---|
| 24 - 09 - 1969 | 30 - 06 - 1988 |

எம் மண்ணை மிதித்தடக்க வந்தவனை விரட்ட எம்மை விட்டுச் சென்று ஈராண்டு ஆனாலும் உன் இனிய நினைவுகளுடன் வாழும்

அம்மா, அப்பா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

''இனியனகம்''
வதிரி,
[illegible]

(13482)

## இடமாற்ற அறிவித்தல்

# அண்ணா கோப்பிக் கடை

நவீன சந்தை யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்கு தொடர்ந்தும் சேவையாற்றும் முகமாக தற்காலிகமாக திருநெல்வேலிச் சந்திக் கருகாமையில் யாழ்ப்பாண நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அண்ணா கோப்பி,
திருநெல்வேலி.

(சி-4774)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அருள் சங்கரன் பிருந்தன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 - 11 - 1983 | 01 - 06 - 1990 |

எங்கள் பாசத்திற்குரிய அண்ணாவே,

ஏழு ஆண்டுகள் மழலை காட்டி பகவானின் அருளுடன் வித்தியாரம்பம் பெற்று பள்ளிக்கூடம் சென்று பெருமையுடன் தம்பிமாருடன் இருந்த வேளையில் பொல்லா நோயுடன் போராடி பகவானின் பதம் சேர்ந்த பிருந்தா.

உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்புப் பெற்றோர், தம்பிமார்,
அம்மப்பா, அம்மம்மா,
உறவினர்கள்.

கடை வீதி,
முல்லைத்தீவு.

[13543]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கனகசிங்கம் கந்தசாமி

(வவுனியா மாவட்ட நீதிமன்ற ஊழியர்,
வாஹினி ஹோட்டல் உரிமையாளர்)

| அன்னையின் மடியில்:- | அரக்கரின் பிடியில்:- |
|---|---|
| 18-11-1951 | 10-07-1989 |

ஓராண்டு சென்றாலும் என்றும் எமது உள்ளத்தில் அணையாத தீபமாய் மிளிரும் எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்திபடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு மனைவி, மக்களும்,
சுற்றத்தவரும்.

ஸ்ரேசன் றோட்,
வவுனியா.

[3873]

உ

## 5ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### மகேந்திரன் ஜெயரூபன்

நீர்வேலி,
(பேராதனை பல்கலைக் கழக விஞ்ஞானபீட
இறுதி ஆண்டு மாணவன் 1985)

| ஆண்டவன் படைப்பு: | அலைகடல் பறிப்பு: |
|---|---|
| 15 - 03 - 1962 | 30 - 06 - 1985 |

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்:

பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா, தங்கை, தம்பி.

3ஆம் கட்டை,
இராச வீதி, நீர்வேலி.

(13527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொருளாதாரத் தடையா?

தமிழ்ப் பகுதிகளில் உணவுத் தட்டுப்பாடு நிலவுகிறது. அதனை நிவர்த்தி செய்வதற்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களாவது வந்து சேராவிடில் இன்னும் சில தினங்களில் பட்டினி நிலை தவிர்க்க முடியாததாகிவிடும்.

வடக்கு - கிழக்கில் யுத்த நிலைமை இம்மாதம் 11ஆம் திகதி ஆரம்பமானது. அரசு இன்னும் உணவுப் பொருள்கள் எதையும் அனுப்பி வைக்கவில்லை, நேற்று வரை. அனுப்பி வைப்பதாக - நடவடிக்கை எடுப்பதாக - சொல்கிறதே தவிர எதுவும் கைக்கு வந்து சேரவில்லை.

இதன் காரணமாக அரசாங்கக் களஞ்சியங்களில் கையிருப்புத் தேய்ந்து போய் விட்டது. இராணுவத் தாக்குதல்களினால் இடம்பெயர்ந்து அகதிகளான மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்குக் கூட அரசாங்கக் கையிருப்புப் போதுமா என்ற நிலை.

வடக்கு-கிழக்கில் தனியார் வர்த்தகர்கள் வசம் இருந்த உணவுப் பொருள் மற்றும் பாவனைப் பொருள்களில் பெரும் பகுதி கடைகள் எரிந்து போனதால் நாசமாகிப் போயிற்று. கஷ்டப்பட்டேனும் உணவுப் பொருள்களைக் கொண்டு வரத் தனியார் 'துறையினர் எடுத்த முயற்சி கைகூடவில்லை. மதவாச்சிக்கு இப்பாலும், பொலனறுவைக்கு அப்பாலும் தனியார் உணவு லொறிகள் பயணம் செய்ய முடியவில்லை. கொழும்பில் இருந்து வந்த உணவு வாகனங்கள் பலவற்றை இராணுவத்தினர் திருப்பி அனுப்பி விட்டனர்.

மொத்தத்தில் வடக்கு - கிழக்கில் அரசாங்கக் களஞ்சியங்களிலும் கையிருப்புத் தேய்ந்து போயிற்று; தனியார் கையிருப்பும் குறைந்து விட்டது. அரசாங்கம் தானும் உணவுப் பொருள் [illegible] அனுப்புவதில்லை; தனியார் கொண்டு வருவதையும் படையினர் அனுமதிக்கிறார்கள் இல்லை.

அதாவது அமைச்சர்கள், அதிகாரிகள் நடத்தும் முதலாவது அரசாங்கம் தமிழ்ப் பகுதி மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதில் தாமதம் காட்டி அவர்களைப் பட்டினி போட முயல்கிறது. படையினரோ இரண்டாவது அரசாங்கமாக இயங்கி, உணவுப் பொருள் வடக்கேயும், கிழக்கேயும் வருவதை தடை செய்கின்றனர்!

சர்வதேச நிறுவனமான செஞ்சிலுவைச் சங்கம் தனது பொறுப்பில் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து விநியோகிக்க எடுத்த முயற்சிக்கும் கொழும்பு அரசாங்கம் இது வரை இணக்கம் தெரிவிக்கவில்லை.

ஆனால் பத்திரிகையாளர் மாநாடுகள் மூலமும், அறிக்கைகள் மூலமும் தமிழ்ப் பகுதிகளுக்கு உணவு அனுப்பப்படுவதாக அமைச்சர்களும், அதிகாரிகளும் பறைசாற்றுகிறார்கள். தமிழ் மக்களைத் தாம் பட்டினி போடவில்லை என்று வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்கிறார்கள்.

காங்கேசன் துறைக்கு வந்த மாக் கப்பலைத்திருப்பி அழைத்த அரசுக்கு, செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் உணவுப் பொருள் வழங்குவது தொடர்பாக ஒரு வார காலமாக முடிவுக்கு வர முடியாத அரசுக்கு தமிழர்களைப் பட்டினி போடக் கூடாது என்பதில் அக்கறை உண்டு என்று எப்படிச் சொல்வது?

இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்து, பெருக்கிப் பிரித்துப் பார்த்தால் கொழும்பு அரசாங்கம், தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடை விதித்திருக்கிறது என்று கொள்வதை விட வேறு முடிவில்லை. யுத்தத்தை உத்தியோக ரீதியாகப் பிரகடனப்படுத்தியிருக்கும் அரசு, பொருளாதாரத் தடையை மறைமுகமாக விதித்திருக்கிறது. அவ்வளவுதான்.

# அரசியல் தீர்வுக்கான பேச்சை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்

## இலங்கை அரசை வி. பி. சிங் கோருகிறார்

புதுடில்லி, ஜூன் 30

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணவும் நாட்டில் இயல்பு நிலைமையை மீண்டும் ஏற்படுத்தவும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி இலங்கை அரசை, இந்தியப் பிரதமர் வி.பி.சிங் கேட்டிருக்கிறார்.

இந்தியாவில் இருந்து மாதமிருமுறை வெளிவரும் ஆங்கில சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் பிரதமர் வி.பி சிங் இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை இந்தியா ஆதரிக்கின்றது.

அதேநேரத்தில் இலங்கையில் வாழும் வம்சாவளித் தமிழர்களின் பத்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் இந்தியா வகை செய்தாக வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் சட்டபூர்வமான விருப்பங்களையும் அபிலாஷைகளையும் முழுமையாகத் திருப்தி செய்யக்கூடியதாக பேச்சுக்கள் அமைய வேண்டும்.

இதற்காக இலங்கை மீது இந்தியா இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகிக்கும்—

இப்படி பிரதமர் திரு.சிங். தனது பேட்டியில் மேலும் தெரிவித்தார். (இ-எ)

# யாழ். நகர அழிவுகள் பற்றி ராய்ட்டர் செய்தியாளர்

கொழும்பு, ஜூன் 30

யாழ் குடாநாட்டுக்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்ட ராய்ட்டர் செய்தியாளரின் அனுபவங்களை கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்றுப் பிரசுரித்து இருந்தது.

'யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கட்டடங்கள் விமானக் குண்டுவீச்சால் இடிந்து போயுள்ளன.

'நகரின் ஒரு பகுதி தரை மட்டமாக்கப்பட்டுள்ளது.

'இடிந்தும் எரிந்துகொண்டும் இருந்த கட்டடங்களில் இருந்து உணவுப் பொருள்களையும் மருந்துவகைகளையும் எடுக்கமக்கள் முண்டியடித்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

'கடும் சண்டை நடைபெறும் பகுதிகளில் இருந்து யாழ்ப்பாண மக்கள் தங்கள் உடைமைகளை மாட்டு வண்டிகளிலும் ட்ராக்டர்களிலும் ஏற்றிக்கொண்டு இடம்பெயர்கிறார்கள்.

'வீடுகள், கோயில்கள், பாடசாலைகளில் பதுங்கு குழிகளை மக்கள் வெட்டி இருப்பதால் உயிரிழப்புக்கள் குறைவாக உள்ளன.

'வேட்டுச் சத்தம் கேட்டதும் விளக்கை அணைத்து விட்டு மக்கள் பதுங்கு குழிகளுக்குள் பதுங்குகின்றார்கள்

'நகரில் வேறு ஒரு பகுதியில் அரிசி வாங்குவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்பதைக் காண முடிந்தது.

'எரிபொருள் பத்துமடங்கு விலை அதிகரிப்புடன் விற்பனையாகிறது'.

—இப்படி ராய்ட்டர் செய்தியாளர் யாழ். நகரில் தான் கண்டதை தனது செய்தியறிக்கையில் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

# கொழும்பில் சிக்கி உள்ள 150 மன்னார் அகதிகள்

கொழும்பு, ஜூன் 30

கொழும்பில் நிர்க்கதியான நிலையில் உள்ள மன்னாரைச் சேர்ந்த நூற்றி ஐம்பது தமிழ் அகதிகளை கடல்மார்க்கமாக தலைமன்னார் இறங்கு துறைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை துணை அமைச்சர் பி.பி.தேவராஜ் தெரிவித்தார் என்று கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த அகதிகள் தற்போது வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஆலயத்தில் தங்கி உள்ளனர். (இ-எ)

## பொங்கல்

கொழும்புத்துறை ஜூன் 30

கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி அருள்மிகு அம்மன் -ஐயனார் ஆலய ஆனி மாத வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை நடைபெற உள்ளது. [அ-30]

# காரைநகரில் பீரங்கித் தாக்கு

காரைநகர், ஜூன் 30

காரைநகர் கடற்படை முகாமிலிருந்துவியாழன்காலையும், நண்பகலும் இரு தடவைகள் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. ஷெல்கள் பலகாடு, துறைமுகம், மற்றும் வயல் வெளிகளிலும் வீழ்ந்து வெடித்தன. இதனால் முகாமுக்கு அருகிலுள்ள சில வீடுகள் சேதமடைந்தன.

இதேவேளை புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் இதேபகுதிகளில் ஹெலியிலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது- (ஓ-ரி)

# மனித நடமாட்டம் வவுனியாவில் இல்லையாம்!

கொழும்பு. ஜூன் 30

வவுனியாநகரில் இராணுவம், பொலீஸ் ஆகியன நிலைகொண்டிருக்கின்றனவாம். மனிதநடமாட்டமே காணப்படாத வவுனியா நகரினுள் எவருமே நுழைய முடியாமல் உள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று கூறுகிறது.

இதனிடையில்- வவுனியாவில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றவர்களை வீடுகளுக்குத் திரும்பும்படி வவுனியாவுக்கான சிவில் பொறுப்பு இணைப்பதிகாரி கேர்னல் ரத்நாயக்கா வேண்டுகோள் விடுத்திருப்பதாக இன்னொரு கொழும்புச் செய்தி தெரிவிக்கின்றது. (இ-எ)

# கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் வழியில் பட்ட கஷ்டங்கள்

## அனுபவித்தவர் சொல்கிறார்

யாழ்ப்பாணம் ஜூன் 30

கொழும்பிலிருந்து லொறி ஒன்றில் புறப்பட்ட நாம் 5 தினங்களின் பின்னர் பல கஷ்டங்களின் மத்தியில் யாழ்ப்பாணம் வந்தடைந்தோம்.

இப்படிக் கூறினார் தனியார் நிறுவன உரிமையாளர் ஒருவர்.

அவர் தனது பிரயாண அனுபவங்கள் குறித்து உதயனுக்குத் தெரிவித்ததாவது :-

20 ஆம் திகதி புதன்கிழமை தனியார் லொறி ஒன்றில் ஆண்களும், பெண்களுமாக பலர் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டோம். நாம் புத்தளத்தை அடைந்தபோது யாழ்ப்பாணம் போக முடியாது என்று அங்கு வைத்துத் தெரிவித்த பொலீஸார் எம்மைத் திருப்பி அனுப்பினார்கள்.

### வேறு மார்க்கமாக

நாம் வேறு பாதைகளால் சென்று அனுராதபுரத்தை அடைந்தோம்.

அங்கிருந்து மதவாச்சிக்குப் போனோம். '' உங்களை யாழ்ப்பாணம் போக விடமாட்டோம். எமது ஆட்களுக்குசாப்பாடுகொடுக்க புலிகள் சம்மதம் தெரிவித்தால் தான் உங்களை அங்கே போக அனுமதிப்போம் '' என்று மதவாச்சியில் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார் எம்மைத் திருப்பி போகும்படியும் அதட்டினார்

### மீண்டும் புத்தளத்துக்கு

நாம் திரும்பி மீண்டும் புத்தளத்துக்குச் சென்றோம். புத்தளம் காளியம்மன் கோவிலில் படுத்து இரவைக் கழித்தோம். அதிகாலை மீண்டும் அனுராதபுரம்புறப்பட்டோம் அரச அதிபரிடம் விரைத்தை தெரிவிக்கமுயன்றோம், அனுராதபுரத்தில் சில குண்டர்கள் எம்மைத் தாக்க முனைந்தார்கள் இதனால் மீண்டும் புத்தளம் நோக்கிச் சென்றோம் மீண்டும் புத்தளம் காளியம்மன் ஆலயத்தில் தஞ்சம் அடைந்தோம்.

அங்கு படுத்திருந்த போது பொலீசார் அங்குவந்து தங்கிய தற்கான காரணத்தைக் கேட்டனர் பின்பு மீண்டும் நடுநிசியில் பொலிஸார் வந்தனர் ''நீங்கள் இங்கு இருப்பதால் பயம் என்று முஸ்லிம் மக்கள் கூறுகிறார்கள் விரைவாக இங்கிருந்து போய்விடுங்கள்'' என்று பொலீஸ் அதிகாரி உத்தரவு பிறப்பித்தார்.

இரண்டில் ஒன்று பார்ப்போம் என்று நினைத்து மீண்டும் அனுராதபுரம் சென்றோம் எவ்வளவோ கஷ்டப்பட்டு அரச அதிபரைச் சந்தித்தோம்

அவர் தந்த கடிதத்துடன் மதவாச்சிக்கு வந்தோம் கடிதத்தை இராணுவ அதிகாரியிடம் கொடுத்தோம். வேண்டா வெறுப்பாக கடிதத்தைப் பெற்று சகலரையும் யாழ்ப்பாணம் நோக்கிச் செல்ல அனுமதித்தனர்.

அச்சமயம் வடக்கை நோக்கி உணவுப்பொருட்களை ஏற்றி வந்த லொறிகளை பின்னே செல்லுமாறு கூறி இராணுவ அதிகாரி பெரிய பொல்லுடன் சென்றார். சகல லொறிகளும் பின் நோக்கி விரைவாக நகர்ந்தன. எமது லொறி [illegible]

இப்படி அவர் கூறினார். (இ-3)

## நிவாரண வேலைகளுக்காக

# பல்கலைக்கழகமாணவர்குழு முல்லைத்தீவு சென்றுள்ளது

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர் குழுஒன்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அகதிகளுக்கு உதவுவதற்காக முல்லைத்தீவு சென்றுள்ளது.

மேலும் வெளிமாவட்டங்களுக்குச் சென்று இரத்ததானம் செய்யவும், முதலுதவிப் பணிகளில் ஈடுபடவும் பல்கலைக்கழக மாணவர் தயார் நிலையில் உள்ளனர்

அகதிகளுக்கு வழங்குவதற்காக பல்கலைக்கழக மாணவர்களும், ஊழியர்களும் பொது மக்களிடமிருந்து உடுபுடைவைகள், நிதி ஆகியவற்றைச் சேகரித்து வருகிறார்கள்.

இதற்கு ஆதரவு தருமாறு பொதுமக்களிடம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

முதற்கட்ட நிவாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒரு தொகுதி உடுபுடைவைகளும், சவர்க்காரக் கட்டிகளும் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டன. (இ-மு)

## நேரடி மோதல்

கொழும்பு ஜூன் 30

வவுனியா - ஹொறவப்பொத்தானை வீதி, தம்பலகமம், உஹனை, ஈச்சிலம்பத்தை, மங்களஓயா நிலாவெளி ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே நேரடி தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்று, கல்முனை, காரைதீவு, மல்வத்தை, அனுராதபுரத்தில் ஹொப்பிட்டிபொல ஆகிய இடங்களிலும் நேரடி மோதல்கள் இடம் பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# படுக்கைக்காக கோவிலுக்கு வந்தபோது ஹெலி தாக்கியது

## நல்லூரில் காயமடைந்தவர் தகவல்

யாழ்ப்பாணம் ஜூன் 30

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வியாபாரம் நடத்தும் நானும் எனது மைத்துனரும் படுக்கைக்காக இரவு நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு வந்த பொழுது ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தியது. இதனால் எனது மைத்துனரான எஸ். கணேசன் கடும் காயமடைந்து பின்னர் மரணமானார். நானும் பலத்த காயத்துக்கு உள்ளானேன்.

நல்லூரடியில் கடந்த புதன் கிழமை ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு இலக்கான ஆறுமுகம் வேலு (வயது 50) இவ்வாறு தெரிவித்தார்,

மானிப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் சிவன் கோவிலடியில் சென்ற பொழுது ஹெலிக்கொப்டர் ஒன்று சிவன் கோவிலடிப் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

பயம் காரணமாக நானும் மைத்துனரும் சுவர் ஓரமாக பதுங்கிக் கொண்டோம். எமக்கு அருகில் வேறு பலரும் பதுங்கி இருந்தனர்

திடீரென இரண்டு மூன்று பெரிய வெடிச் சத்தங்கள் கேட்டன.

நின்றவர்கள் பலரும் ஐயோ ஐயோ என கத்தியபடி கீழ விழுந்தனர். எனக்கும் எனது மைத்துனருக்கும் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிவதை அப்பொழுது தான் உணர்ந்தேன்.

பின்னர் அங்கு நின்றவர்கள் மூலம் வேறிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் எனது மைத்துனர் இறந்து விட்டதாக அறிந்தேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-10)

# பிளாட்டின் கீழ் நின்றபோது கூரையை பிய்த்தது ரொக்கட்

## கொக்குவில் உயிர் தப்பியவர் தகவல்

ஹெலிக்கொப்டருக்கு பயந்து நாங்கள் 11 பேர் வீட்டின் கொங்கிறீட் பிளாட்டின் கீழ் நின்றோம். அப்போது கூரையைப் பிய்த்துக் கொண்டு வந்த ரொக்கெட் ஒன்று அந்த இடத்திலேயே நாலு பேரைப் பலி கொண்டது.

கொக்குவிலில் ஹெலிக்கொப்டரில் இருந்து வீசப்பட்ட ரொக்கட் தாக்குதலில் காயமடைந்து மானிப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் மாணிக்கம் செல்வராஜா (வயது29) இவ்வாறு தெரிவித்தார்.

இச் சம்பவத்தில் இவரது மனைவி எஸ் வசந்தா (வயது20) சாயமடைந்து சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

செல்வராசா சம்பவம் பற்றி மேலும் தெரிவித்ததாவது;-

செவ்வாய்க் கிழமை இரவு எட்டு மணி அளவில் நானும் எனது மனைவியும் உட்பட 11பேர் கொக்குவிலில் உள்ள எமது வீட்டில் இருந்தோம்.

அப்பொழுது இரவு எட்டு மணி இருக்கும் ஹெலியின் சத்தம் கேட்டு நாங்கள் கொங்கிரீட் பிளாட்டின் கீழ் நின்றோம்.

திடீரென மின்னல் போன்ற ஒரு வெளிச்சத்துடன் ஏதோ வெடித்தது.

அனைவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தோம் எனக்கு முன்னால் நின்ற சிறுவர்கள் மூச்சுப் பேச்சின்றி கிடப்பதைக் கண்டேன்.

பின்னர் அவர்கள் இறந்து விட்டதாக அறிந்தேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-10)

# 'ஹபிள்' தொலைநோக்கியில் மீண்டும் தொழில்நுட்பக் கோளாறு

நியூயோர்க், ஜூன் 29

பிரபஞ்ச மர்மத்தைக் கண்டறிய கடந்த ஏப்ரல் மாதம் விண்ணுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 'ஹபிள்' தொலைநோக்கியில் பாரதூரமான தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டிருப்பதாக நாஸா விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் நேற்று அறிவித்தனர்.

இந்தக் கோளாறை தரையில் இருந்து திருத்தக்கூடியதாக இல்லை என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

விண்கலம்ஒன்றை வானுக்கு அனுப்பி அதில் இருந்தபடி கோளாறைத் திருத்துவது பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இக்கோளாறு காரணமாக பிரபஞ்ச மர்மத்தை வெளிப்படுத்தக்கூடியதான மிகத்துல்லியமாக படங்களை எடுக்கமுடியாதநிலை'ஹபிள்' தொலைநோக்கிக்கு ஏற்பட்டிருக்கிறது.

## தரையிலிருந்து திருத்தமுடியாது விண்கலம் அனுப்ப முயற்சி

ஆயிரத்து 400 கோடி ஒளி ஆண்டுகளுக்கு அப்பாலுள்ள பிரபஞ்ச மர்மத்தைக் கண்டறியவே இத்தொலைநோக்கியை விஞ்ஞானிகள் விண்ணுக்கு அனுப்பிவைத்தனர்.

இத்தொலைநோக்கி விண்ணுக்கு அனுப்பப்பட்ட பின்னர் ஏற்பட்ட மூன்றாவது கோளாறு இதுவாகும்.

ஏற்கனவே ஏற்பட்ட இரண்டு கோளாறுகள் திருத்தப்பட்டன. (இ-எ)

# பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது மக்கள் தகவல் பிரிவு

கொழும்பு, ஜூன் 30

பாதிக்கப்பட்ட பகுதிகளில் காணமற் போனவர்கள் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கத்துடன் மாவட்ட ரீதியில் பொது மக்கள் தகவல் நிலையங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.

இத்தகவலை ஜனாதிபதியின் சர்வதேச வெளியுறவு ஆலோசகர் பிராட்மன் வீரக்கோன் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

இந்த நிலையங்கள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் இயங்க இருப்பதாகவும் திரு.வீரக்கோன் தெரிவித்தார். (இ-எ)

## தமிழீழ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகள் மூலமும் மற்றும் தொடர்பு சாதனங்கள் மூலமும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்

சிங்களப் படைகளின் செலவினத்திற்கென இவ்வருடத்திற்கு மேலதிகமாக 500 கோடி ரூபாவை ஒதுக்க ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே இவ்வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட 260 கோடி ரூபாவுடன் இது மொத்தம் 760 கோடி ரூபா ஆகின்றது.

இது போதாதென்று மேலும் நிதியுதவி கோரி ஸ்ரீலங்கா மக்களிடமும், ஸ்ரீலங்கா ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தபடி உள்ளார்.

இவ்விதம் தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சிங்களப் படைகளை எதிர்த்துப் போராடி, நாம் வெற்றி கொள்ள வேண்டியவர்களாயுள்ளோம்.

இந்தயுத்தத்திற்குத்தேவையான நிதியை தமிழீழ மக்களாகிய உங்களிடமிருந்து தான் நாம் பெறவேண்டிய நிலையிலுள்ளோம்.

எனவே அன்பார்ந்தபொது மக்களே! தமிழீழ மீட்புநிதி என்ற கடன்திட்டத்திற்கூடாக உங்களிடம் இந்த நிதியைக்கோரிநிற்கின்றோம்.

எமது மக்களிடமிருந்து பெறப்படும் இந்தநிதியானது கட்டம் கட்டமாக மீளத் திருப்பிக்கொடுக்கப்படும் நடைமுறையைக்கொண்டதாக இருக்கும். இத்தொடர் [illegible] விரிவான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)[வயது53].

## மீண்டும் படையை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைக்கும் சூழ்நிலை ஏற்படுமா?

குஜ்ரால்: இந்தியாவிடம் இத்தகைய யோசனைகள் திட்டங்கள் எதுவும் இல்லை. இந்தியா அந்த வழியில் சிந்திக்கவில்லை

கேள்வி: விடுதலைப் புலிகளும் மற்றும் தமிழ் தீவிர வாதக் குழுக்களும் [illegible] பெற்ற காலகட்டத்தைப் போன்று தமிழ் நாடு தனிக் கொள்கையைப் பின்பற்றுமா?

குஜ்ரால்; அப்படியான சாத்தியக் கூறுகள் இல்லை

### ஒப்பந்தப் பிரகாரம் தீர்வுஉண்டு

கேள்வி: இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளும் அபிலாஷைகளும் எத்தகையவையாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள்?

குஜ்ரால்: இந்தியாவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்

இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றை இந்தியா மதிக்கிறது.

அதிகாரப்பரவலாக்கல் எத்தகையவையாக அமைய வேண்டும் என்பது இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிக்கும் இந்தியாவின் முன்னாள் பிரதமருக்கும் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை பிரச்சினைக்குத் தீர்வு காணும் அடிப்படையாக இன்னமும் விளங்குகிறது என்று நான் கருதுகிறேன்.

வடக்கு- கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரத்தைப் பரவலாக்கல், இரு மாகாணங்களையும் இணைப்பது தொடர்பான அபிப்பிராய வாக்கெடுப்பு ஆகியனவே இவையாகும்.

இந்த நடவடிக்கைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை உண்மையில் இதில் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

இதற்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று நான் நம்பிக்கை கொண்டிருக்கின்றேன். (அ-எ)

## உப தபால் அதிபர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கட்டுவன் உப.தபால் அதிபர் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 2 30 மணி அளவில் பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல் இவர் படுத்திருந்த வீட்டு முற்றத்தில் விழுந்து வெடித்தது

காயமடைந்தவர் கோபாலகிருஷ்ணசாமி சிவபாக்கியம் (இ-10)

## அகதிகள் அலவன்ஸ் அதிகரிப்பு

சென்னை, ஜூன் 30

தமிழ் நாட்டில் முகாம்களில் தங்கி உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு புதுடில்லி அரசு வழங்கிவரும் நாளாந்த அலவன்ஸ் தொகை அதிகரிக்கப்பட்டிருப்பதாக நேற்றுச் சென்னையில் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

MILKWHITE BAR SOAP

மில்க்வைற் பார் சோப்
600 கிறாம் ரூ. 20. 00
300 கிறாம் ரூ. 10. 00
மேலுறைகளுக்கு பரிசுகள் உண்டு.
5 மேலுறைகள் அப்பியாசக்கொப்பி
10 மேலுறைகள் கைலேஞ்சி
25 மேலுறைகள் துவாய்
50 மேலுறைகள் பெட்சீற்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

உதயன்

30 - 6 - 1990 சனிக்கிழமை

மில்க்வைற் விற்பனையாளர்களே!
மில்க்வைற் 50 கிறாம் ரூ. 275/
சலவைப் பவுடர் பக்கெற் பதிந்து வரும்
காட் 100 அனுப்பி ஒரு பயனுள்ள துவாய்
பெற்றுக்கொள்ளுங்கள்.
✶ தொடர்ந்தும் சேகரியுங்கள்
✶ தொடரும் பரிசுத்திட்டமிது.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# திருமலை மயானம் ஒன்றில் அழுகிய 13 சடலங்கள்

கொழும்பு, ஜூன் 30 திருகோணமலை அலஸ் தோட்டம் பகுதியில் உள்ள மயானம் ஒன்றில் இருந்து பதின்மூன்று சடலங்கள் அழுகிய நிலையில் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போதே இச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பொலிஸாரின் சடலங்களாக இவை இருக்கக் கூடும் என்று சந்தேகப்படுவதாக கொழும்பில் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன என்று இந்திய வானொலி கூறியது. (ஒ-எ)

# சுகாதார ஊழியர்களை பணிக்கு வருமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30 வடபிராந்தியத்தில் உள்ள வைத்திய நிலையங்களில் கடமைபுரியும்சுகாதாரசேவையைச் சேர்ந்த சகல ஊழியர்களையும் உடனடியாக வேலைக்குச் சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்றுள்ள நிலையில் சுகாதாரப்பகுதி ஊழியர்கள், வைத்தியர்கள் மக்களுக்குத் தமது சேவையை வழங்க வேண்டியது அவசியம். இதுவரை வேலைக்குச் சமுகமளிக்காதவர்களும், விடுமுறையில் சென்றோரும் உடனடியாக வேலைக்குத் திரும்பி மக்களுக்காகச் சேவையாற்ற வேண்டும்என்றும் அவர் கேட்டுள்ளார். (ஒ-3)

# ஜம்மு - காஷ்மீர், பாதுகாப்புக்கு மன்னிப்புச் சபை பிரதிநிதிகள்

## செல்வதற்கு இந்திய அரசுஅனுமதி

புதுடில்லி, ஜூன் 03 சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகள் ஜம்மு- காஸ்மீர் பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்கு விஜயம் செய்து நிலைமையை நேரிற் பார்வையிட இந்திய அரசு நேற்று அனுமதி வழங்கியது.

பிரதமர் வி.பி.சிங்கின்இந்த நடவடிக்கையை அமெரிக்க காங்கிரஸின்தென்கிழக்காசிய விவகாரக்குழுவின் உபதலைவர் ஸ்டீபன் சோலார்ஸ் வரவேற்றார். (ஒ-எ)

யாழ். நகரப் பகுதியிலுள்ள

# அகதி முகாம்களின் சுகாதாரம்; மாநகர சபை பேணுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 30 யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைந்துள்ள அகதி முகாம்களுக்கான சுகாதார சேவைகளை யாழ். மாநகர சபை சுகாதாரப்பகுதி வழங்கி வருகிறது.

இந்த முகாம்களில் வயிற்றோட்டம், சிரங்கு போன்ற நோய்கள் தென்பட்ட போதிலும் சுகாதாரப் பகுதியினரின் அவசர நடவடிக்கையால் நோய் பரவுதல் தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அகதிமுகாம் எதற்கும் சுகாதார உதவி தேவைப்பட்டால் உடன் மாநகரசபையில் இயங்கும் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஒ-3)

சனசமூக நிலைய உறுப்பினர்களை

# அகதி முகாம்களுக்கு சென்று உதவிபுரிய வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 30 யாழ். மாவட்ட சனசமூக நிலைய அங்கத்தவர்களை இயலுமானவரை தங்கள் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுடன் சேர்ந்து வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக வேறு உதவிகள் தேவைப்படின் நம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-10)

# மரண அறிவித்தல்

## நவரத்தினம் சிவசிதம்பரம்

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகக் கொண்டவரும் சங்கானை கிழக்கு ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய நவரத்தினம் சிவசிதம்பரம் (இளைப்பாறிய விவசாய உத்தியோகத்தர்) 29- 6- 90 காலை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவிதானையார் நவரத்தினமும் பெண்செல்லம்மாவின் மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், சத்தியபாமா, சத்தியமூர்த்தி, சத்தியகுமாரி, சத்தியதேவி, சத்தியவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராஜா (அமெரிக்கா), ஸ்ரீபிரபாவின் அன்பு மாமனாரும், கௌரி, கரன் ஆகியோரின் பேரனும், மாணிக்கவாசகர், திருமதி முத்துக்குமாரு, சோமசுந்தரம், திருமதி ஜெயராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் சங்கானை மயானத்தில் 29-6 - 90 மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

தகவல்:
ந. சோமசுந்தரம்

ஐயனார்கோவிலடி,
வண்ணார்பண்ணை,

(13247)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கார்க் குண்டு வெடித்து 14 பேர் மரணம்

பொகொடா, ஜூன் 30 கொலம்பியாவில் சக்தி மிகுந்த கார்க் குண்டு ஒன்று வெடித்ததில் 14 பேர் உயிர் இழந்தனர்.

போதை உற்பத்தியில் ஈடுபடும் மெடலியன் நகரில் பொலீஸ் நிலையம் ஒன்றின் அருகில் இச் சம்பவம் இடம் பெற்றது.

ஒரு பத்திரிகையாளர், நான்கு குழந்தைகள், செனட்டர் ஒருவரின் மனைவி ஆகியோர் உயிரிழந்தவர்களில் அடங்குவர். (ஒ-எ)

## அரச அதிபர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாபன அதிகாரிகள், வங்கி அதிகாரிகள், உணவு விநியோகத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் உட்பட உயர் அதிகாரிகள் பலர் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அத்தியாவசியப் பொருளகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு குறித்து முக்கியமாக ஆராயப்பட இருக்கிறது. (ஒ-3)

## மட்டுநகரில்- -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் விசாரணைக்காக சமுகமளிக்கவேண்டும் என்று பாதுகாப்புப்படையினர் உத்தரவிட்டனர்.

ஒலிபெருக்கிகள் மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

போராளிகளைக் கண்டுபிடிக்க எடுக்கப்படும்ஓர் உத்தி இது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை மட்டுநகர்ப் பகுதியில் நேற்று மாலைவரை வீடுவீடாகத் தேடுதல் நடைபெற்றுக் கொண்டிருந்ததாகஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## மீண்டும்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கமாக குடியிருக்கும் பிரதேசத்தில்— வீடுகளுக்கு மேல் விழுந்து வெடித்தன.

### வீடுகள் பல சேதம்

இதனால் இருபத்தி ஐந்துக்கும் அதிகமான வீடுகள் முற்றாகச் சேதமுற்றன.

யாழ் மத்திய கல்லூரியின் பின்புறத்தில் உள்ள சில கட்டடங்கள், பிரதான வீதியில் உள்ள இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் யாழ் கிளை, முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள மார்புநோய் சிகிச்சை நிலையம் ஆகியவையும் சேதமுற்றன.

குருநகர் ஐஸ்விங் வீதியிலும் மூன்று வீடுகள் சேதமுற்றன.

காங்கேசன்துறை வீதியில் யாழ் இந்துக்கல்லூரிச் சந்தியில் நடத்தப்பட்ட குண்டு வீச்சினால் ஒரு வீடு முற்றாகத் தகர்ந்தது. டாக்டர் சிவபாதசுந்தரத்தின் சிகிச்சை நிலையத்துக்குப் பின்னால் இருந்த வீடே சேதமுற்றது.

குண்டு வீச்சு இடம்பெற்ற பல இடங்களில் குண்டுகள் கிணறுகள் போன்ற ஆழமான குழிகளை ஏற்படுத்தியிருந்தன.

அனேகமான இடங்களில் குண்டுவீச்சு நடைபெற்ற போது வீடுகளில் இருந்த பொதுமக்கள் பாதுகாப்பிற்காக பதுங்கு குழிகளுக்குள் தஞ்சம் புகுந்திருந்தனர். இதனால் உயிரிழப்புகள் பெரிதும் தவிர்க்கப்பட்டன.

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியிலும் குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 500 பொலீஸார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்ப் போராளிகள் கடற்கரைப் பிரதேசத்தின் ஊடாக தமிழ் நாட்டுக்குள் ஊடுருவல் செய்வதைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டு உள்ள பொலீஸாருக்கு நூற்றுக்கு அதிகமான ஏ. கே. 47 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத் தகவலை தமிழ் நாடு பொலீஸ் அணையாளர் பி. துரை நேற்று செய்தியாளர்களிடம் வெளியிட்டார். (ஒ-எ)

மதுரையில் தங்கியுள்ள

# ஈழத் தமிழர்கள் 75 பேர் பொலீஸில் பெயர் பதிவு

சென்னை, ஜூன் 30 மதுரையில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களில் 75 பேர்கடந்தவியாழன்,வெள்ளி ஆகிய தினங்களில் தங்கள் பெயர் விவரங்களை பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்தனர்.

தமிழ் நாட்டில் 1983 முதல் உரிய ஆவணங்கள் இன்றித் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் தங்கள் பெயர் விவரங்களை பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்ய தமிழக அரசு ஏழு நாள் காலக்கெடு விதித்துள்ளது தெரிந்ததே.

வடக்கு - கிழக்கு

# மாகாண சபை ஊழியருக்கு சில தினங்களில் சம்பளம்?

வடக்கு - கிழக்கு மாகாண சபை ஊழியர்களுக்கான சம்பளம் எதிர்வரும் (ஜூலை) நான்காம் திகதிக்கு முன்பாக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய வருகிறது.

அமைச்சர் ஏ. ஆர். மன்சூரின் வேண்டுகோளின் மீது ஜனாதிபதி இதற்கான உத்தரவை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# செஞ். சர்வதேசக் குழு அதிகாரி அகதி முகாம்களுக்கு விஜயம்

யாழ்ப்பாணம். ஜூன் 30 செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் நிவாரண வைத்திய சேவைகளுக்குப் பொறுப்பான அதிகாரி செல்வி எலிசபெத் நேற்று அகதி முகாம்களைப் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்தில் தங்கி நிவாரண, வைத்திய சேவைகளை மேற்பார்வை செய்து வரும் இவர், யாழ், நகரப் பகுதியிலும் வலி-வடக்கு, வலிமேற்குப் பகுதிகளிலும் உள்ள அகதி முகாம்களையும் பார்வையிட்டார். அவர் முகாம்களில் அகதிகளுக்கு உள்ள குறைபாடுகளையும் அவர் கேட்டறிந்துகொண்டார். (ஒ-3)

## தொண்டர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30 காங்கேசன்துறை தொகுதி சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையைச் சேர்ந்த தொண்டர்களை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணிக்கு சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் சமுகமளிக்குமாறு பகுதி அத்தியட்சகர் திரு. அருந்தவராசா கேட்டுள்ளார். (ஒ-3)

## ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 30 யாழ். நகரில் நேற்று குண்டு வீச்சு நடந்த அதே வேளை அராலித் துறைப் பகுதியிலும் ஹெலித் தாக்குதல் இடம்பெற்றது. சேத விவரம் தெரியவரவில்லை. (ஒ-3)

வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை

# சகல வைத்தியசாலைகளுக்கும் கூடுதல் வசதி வழங்கப் பட்டுள்ளது

## சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 30 சகல வைத்திய சாலைகளுக்கும் கூடுதல் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் நோயாளர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு அண்மையில் உள்ள வைத்தியசாலைகளுக்கு செல்லுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபை அறிவுறுத்தியுள்ளார்.

பொதுமக்களுக்கு அவர் விடுத்துள்ள வேண்டுகோலில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

வைத்தியசாலைகளுக்கு கூடுதல் வைத்தியர்களையும், ஊழியர்களையும் நியமித்தும் கூடுதலான மருந்து வகைகளை வழங்கியும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் மத்திய மருந்தகங்கள் ஞாயிறு பகிரங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8 மணிமுதல் மாலை ஐந்து மணிவரையும் ஞாயிறு மற்றும் விடுமுறைநாட்களில் காலை எட்டுமணி முதல் காலை 10 பத்து மணிவரையும் கடமை புரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது -- என்றார். (ஒ-3)

# மயானம் சென்றோர் மீது வேட்டுக்களைதீர்த்தது ஹெலி

மயானத்துக்குச் சென்றவர்கள் மீது ஹெலிக்கொப்டரில் இருந்து நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

நேற்றுக் காலை 8 30 மணி அளவில் யாழ்ப்பாணத்துக்கு வந்த ஹெலிகொப்டர் ஒன்று நகரில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

பின்பு விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலினால் உயரப்பறந்து காக்கைதீவுப் பகுதியில் உள்ள மயானத்துக்கு கிரியைக்காக சென்றவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. விபரீதம் ஏதும் ஏற்படவில்லை. (ஒ-10)

உலக கிண்ண உதைபந்தாட்டம்:

# கால் இறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன

மிலான், ஜூன் 30 பதினான்காவது உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் கால் இறுதிஆட்டங்கள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

முதலாவது கால் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவுடன் யூகோஸ்லேவியா மோதுகின்றது. புலோரன்ஸ் நகரில் இந்த ஆட்டம் இடம் பெறும்.

இரண்டாவது கால் இறுதிப் போட்டி ரோம் நகரில் இத்தாலிக்கும் அயர்லாந்துக்கும் இடையே நடைபெறும். (உ-எ)

## இராணுவ- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வி. பி. சிங்கின் தோழமைக் கட்சிகளும், பிரமுகர்களும் நெருக்குதல் கொடுக்க தொடங்கி விட்டதாக - அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (அ)

## ஆசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டது-

ஆனால் ஆசிரியர்களில் அனேகருக்கு ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டது. இது [illegible] மானது-என்று பாதிக்கப்பட்ட [illegible] யும் ஆட்சேபமும் தெரிவித்தனர். (அ-10)

## இவ்வாண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உச்சி மாநாட்டை 1991 இல் கொழும்பில் நடத்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுள்ளார்.

இவ்வாண்டு சார்க் உச்சி மாநாட்டை மாலைதீவில் நடத்த இலங்கை இணக்கம் தெரிவித்திருப்பது தெரிந்ததே. (உ-எ)

# கிலி தரும் வாகனமாக மாறி வருகிறது ஹெலி!

யாழ்ப்பாணம், ஜூன் 30 குடாநாட்டு மக்களுக்கு — குறிப்பாக யாழ். நகர மக்களுக்கு ஹெலி என்றால் இப்போது சிம்மசொப்பனமாகிவிட்டது.

ஒவ்வொரு கணமும் ஹெலிச் சத்தம் கேட்கிறதா என்று பெரியவர்கள் முதல் பச்சிளம் பாலகர்கள் வரை காதைக் கூர்மையாக்கிக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சத்தம் கேட்டவுடன் கிலி கொண்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடுகிறார்கள். அவர்கள் விமானங்கள், பொம்மர்கள் குறித்து இருந்த அச்சத்தைவிட இப்போது ஹெலி பற்றிய நடுக்கம் தான் அதிகம்.

ஹெலியில் இருந்து ரொக்கட் வீசியும் ஷெல் அடித்தும் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தும் மக்களின் உயிரைப் பறித்துக் கொண்டிருக்கின்றன இந்த "ஹெலி" கள்.

காலை —பகல் —மாலை —இரவு என்று இல்லாமல் ஹெலியின் நடமாட்டமும் நாசகாரமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

நேற்றுக் காலை இச்செய்தி எழுதுவற்குச் சற்று முன்னரும் கூட — காலை சுமார் 8. 20 மணியளவிலும் ஹெலி யாழ். நகரின் மேலாகப் பறந்து வேட்டுக்களைத் தீர்த்து விட்டுச் சென்றது.

அடுத்த தடவை ("ரவுண்ட்") எத்தனை மணிக்கு என்று தெரியாமல் நகர மக்கள் அச்சத்துடன் இருந்தார்கள்.

அவர்கள் அஞ்சியது போல பிற்பகலிலும் மூன்று ஹெலிகள் ஏனைய விமானங்களுடன் வந்திருந்தன. (ஒ)

# இடம்பெயர்ந்து சென்றபோது திடீரென ஹெலி தாக்கியது

## காயமடைந்தவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 30 யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் இருக்க முடியாததன் காரணமாக இடம்பெயர்ந்து கோப்பாய்க்கு சென்றுகொண்டிருந்தேன். அப்போது ஷெல் விழுந்து வெடித்தது.

நல்லூர் சிவன் கோவிலடியில் கடந்த புதன்கிழமை ஷெல் தாக்குதலுக்கு இலக்கான மா. இராசதுரை (வயது 39) இவ்வாறு தெரிவித்தார்.

காலிலும், முகத்திலும் பலத்த காயங்களுக்குள்ளான அவர் மேலும் தெரிவித்ததாவது;-

எனது மனைவி, பிள்ளைகளை ஏற்கனவே கொண்டு சென்று கோப்பாயில் விட்டுவிட்டு திரும்பி வந்து வீட்டில் இருந்த பொருள்களை எடுத்துக்கொண்டு நல்லூர் சிவன் கோவிலடியால் வந்து கொண்டிருந்தேன்.

அப்பொழுது அங்கு வந்த ஹெலிக்கொப்டர் திடீரெனச் சுடத் தொடங்கியது. அங்கு நின்றோர் சிதறி ஓடினர். நானும் ஓட முயன்றபோது அருகே விழுந்தகுண்டு வெடித்தது.

அதனைத்தொடர்ந்துஎனது முகத்திலும், காலிலும் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் ஓடத் தொடங்கியது-என்றார். (ஒ10)

# தமிழ் போராளிகள் கைது

சென்னை, ஜூன் 30 தமிழ் நாட்டில் கடந்த வியாழன் ஆறு இலங்கைத் தமிழ்ப்போராளிகள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மதுரையில் மேம்பாலம் ஒன்றையும் ரயில் பாதை ஒன்றையும் குண்டு வைத்துத் தகர்க்க முயன்றனர் என்ற சந்தேகத்தின் மீது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது. (இ-எ)

## இருபதாயிரம்...

குச்சவெளி, கும்புறுப்பிட்டி, தென்னமரவாடி ஆகியஇடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களுக்கென அகதி முகாம்கள் எதுவும் முறையாக அமைக்கப்படவில்லை. எங்கே போவது என்று தெரியாத நிலையில் அகப்பட்ட பாடசாலைகள், கோவில்கள், வீடுகளில் அவர்கள் தங்கி உள்ளனர்.

இவ்வாறு தங்கியிருப்போரில் அநேகர் ஒரு நேரம் மரவள்ளிக்கிழங்குச் சாப்பாட்டோடு நாட்களைக் கழிக்கிறார்கள். சிலருக்கு அதுவும் இல்லாமல் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாக குச்சவெளி, கும்புறுப்பிட்டிப் பகுதிளில் இருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தங்கிருப்போருக்கு சுகயீனங்கள் ஏற்பட்டு இருப்பதாகவும், ஆனால் வைத்திய சிகிச்சை வசதிகள் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. [அ-10]

# கோட்டைக்குள் குண்டுகள் விழுந்தனவா?

யாழ்ப்பாணம், ஜூன் 30 நேற்று யாழ். நகரின் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் நடத்திய விமானக் குண்டு வீச்சு தாக்குதல்களின் போது இரண்டொரு குண்டுகள் இலக்குத் தவறி ஸ்ரீலங்காப் படையினர் முடங்கிக் கிடக்கும் யாழ். கோட்டைப் பகுதிக்குள் விழுந்ததாகக் கூறப்பட்டது.

இதன் பின்னர் கோட்டைக்குள் இருந்து புகை கிளம்பியதாகவும் கூறப்பட்டது.

ஆனால் செய்தி அச்சக்குப் போகும்வரை அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org